உ

குகமயம்

வேலும் மயிலும் துணை

நியூசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபை தலைவரின் ஆண்டறிக்கை

27 புரட்டாதி 2015

ஏமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் எமது நியூசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபையின் சார்பில் அன்புடன் வரவேற்கிறேன். எம்பெருமான் திருமுருகனும் அவரது பரிவாரங்களும் கடந்த ஆண்டு ஆனி மாதம் 8 திகதி ஒரு சுபநேரத்தில் தங்களது புதிய இல்லத்திற்கு குடிபுகுந்தார்கள் இந்த சுபநிகழ்ச்சிக்கு நியூசிலாந்தின் பல இடங்களிலிருந்தும் பல பக்தர்கள் மண்டபம் நிறைய வந்திருந்து முருகப்பெருமானின் ஆசியைப் பெற்றார்கள் .மிகவும் குறுகிய காலத்தில் இந்தச் சாதனையைப் படைக்க எம்பெருமான் கந்தவேளே எமக்கு உறுதுணையாக இருந்தார் . "தனக்கு உவமையில்லதவர் " தாயினும் சிறந்த தலைவர் " எம் ஆறுமுகக்கடவுள் , அவரது தாழ் சேர்ந்தோம் அழகான சிறு கோயில்கள் உருவாகின .

எமது புதிய கோயிலில் இப்போது புதிதாக பாலலிங்கம், கேதாரலிங்கம் , விஷ்ணு , பைரவர் , சண்டேஸ்வரர் , ஆகியோர் நிர்மாணிக்கப் பட்டுள்ளார்கள். பாலலிங்கத்திற்கு பக்தர்களே பால் அபிஷேகம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. மூலமூர்த்தியான முருகப்பெருமானுக்கு முன்னர் பலிபீடம் , மயூரம் ,கொடிக்கம்பம் , பிள்ளையார், ஆகியன நிறுவப்பட்டுள்ளது. இவைகளை நிர்மாணிக்க உதவிய முருகபத்தர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளிவீதி சுற்றவும் வசதிகள் செய்துள்ளோம். அத்துடன் இவ் வருடம் தைப்பூச தினத்தில் எமது கோயிலில் 15 நாள் திருவிழாவையும் மற்றும் தேரோட்டம் ,தீர்த்தம் ஆகியவையும் நடத்தி முடித்துள்ளோம் ..

### வ்ருடாந்த உற்சவம்

கடந்தவருடம் கார்த்திகை மாத நிருவாகசபை கூட்டத்தில் எமது கோயிலின் வருடாந்த உற்சவத் திருவிழாவை நடத்த முடிவெடுத்தோம் . தைப்பூசத்தை உள்ளடக்கிய தை , மாசி மாத நாட்களில் இந்தத் திருவிழா நாட்களை எமது பிரதம

குருக்கள் கணித்துத் தந்தார். கொடியேற்ற உற்சவம் தை மாதத்தில் நடைபெற்று தீர்த்தம் , பூங்காவனம் ஆகியன மாசி மாதத்தில் நிறைவு பெற்றன . 15 நாள் திருவிழாக்களையும் 15 வட்டார அங்கத்தவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். இந்த திருவிழாக்களில் மாம்பழத்திருவிழா, தைப்பூசம், சப்பறம், தேரோட்டம், பூங்காவனம் ஆகியன உள்ளடங்கி இருந்தன. பல தொண்டர்களின் அயராத உழைப்பினால் தேர் ,சப்பறம் ஆகியன செய்துமுடிக்கப்பட்டன. பூங்காவனம் நிகழ்ச்சி மிக அழகாக ஏற்பாடு செய்யபட்டிருந்தது. ஒவ்வொரு இரவும் திருவிழாவின்பின் மாலை உணவும் வழங்கப்பட்டது. இவற்றுக்கெல்லாம் அயராது உழைத்த தொண்டர்கள் அனைவருக்கும் எமது திருபணிச்சபையின் சார்பில் மனமார்ந்த நன்றி. இந்த உற்சவத்தை மிகச்சிறப்பாக நடத்தி முடித்த எமது ஆலய குருமார்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். . இந்த உற்சவத்திற்காக நீங்கள் அளித்த பண உதவியின் மூலமாக கோயிலின் வெளிவீதியையும் முன்வாசல் கதவையும் படிக்கட்டுக்களையும் செய்து முடித்துள்ளோம். . இதே மாதிரி 2016 ஆண்டுக்குரிய திருவிழாவைய்யும் நடத்த எமது திருப்பணிச்சபை ஏற்பாடுகள் செய்து வருகிறது. சென்ற வருடம் அளித்த ஒத்துழைப்பை வருகிற வருடமும் தொடர்ந்து அளித்து இந்த வருடாந்த திருவிழா சிறப்பாக நடைபெற உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

## இளையோரின் பங்களிப்பு

நமது இளையோர்களும், சிறுவர் சிறுமியர்களும் எமது கோயிலின் வருடாந்த நிகழ்ச்சிகளான பண்ணும் பரதமும் , முத்துச்சரம் ,இன்னிசைத் தென்றல் ஆகியவற்றில் கலந்து சிறப்பித்தார்கள். . வெள்ளிக்கிழமை மாலைநேரப்பூசையின்போது திருமுறைகள் பாடி எமது சமயப் பண்பாட்டை பின்பற்றுகிறார்கள். Waitangi Day தினத்தில் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுகிறார்கள். இந்தவகையில் எமது இளையோர் சங்கீதம் , விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அவர்கள் உடல் ஆரோக்கியத்தையும் மனவளர்ச்சியையும் வளர்த்துக் கொள்கிறார்கள். மற்றும் கோயிலில் நடைபெறும் முக்கிய பூசைகளில் கலந்துகொண்டு பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சிகளின்பின் கோயிலைச் சுத்தப்படுத்துதல், அலங்கரித்தல், எமது ஆலய உணவுப்பொதி விநியோகம் மற்றும் கோயில் Web site Development என்பவற்றில் முக்கிய பங்காற்றுகிறார்கள். . இக்கோயிலின் பராமரிப்பு எதிர்காலத்தில் இவர்களின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. திருமுருகன் திருவருள் எம் இளையோருக்கு என்றும் நிலைத்திருக்க எம்பெருமானை பிராத்திப்போம் .

## கோயிலின் மிகுதி வேலைகள் மற்றும் நிதிநிலைமை

பணப்பற்றாக்குறை காரணமாக பக்தர்கட்குரிய வசதிகள் முற்றாக நிறைவேற்றப்படவில்லை Auckland Council மிகுதி வேலைகளைத் துரிதப்படுத்தி coc க்கு விண்ணப்பிக்குமாறு கோரியுள்ளார்கள். .மிகுதி வேலைகளை முடிக்க ஒருவருடகால அவகாசம் வழங்கியுள்ளார்கள். பின்வருவன முடிக்க வேண்டிய முக்கிய வேலைகளாகும்.

1. Insulation and Ceiling

2. Heating and Air-conditioning

3. கிழக்கு /மேற்கு சுவர் வேலைகள்

4.சமுக மண்டப வேலைகள்

5. ராஜ கோபுரம்

இதுவரை எங்களுக்கு உதவி அளித்த மாதிரி மிகுதி வேலைகளையும் நிறைவேற்ற உங்கள் உதவியை நாடி நிற்கிறோம் . குறைந்த பட்சமாக டொலர் 400,000 தேவைப்படுகிறது. இந்த தெய்வீகப்பணி நிறைவேற உங்கள் பேராதரவை நாடி நிற்கிறோம். எங்கள் காலத்திலேயே இப்பணிகளை செய்துமுடித்தால் தென்குமரிக் கண்டத்திலும் ஒரு அழகான முருகன் கோயில் அமைத்த பெருமை நம் ஏல்லோருக்கும் வந்துசேரும் .

இவையாவற்றிக்கும் நிதி சேர்க்கும் முகமாக பல முயற்ச்சிகளை எமது தொண்டர்கள் செய்து வருகிறார்கள் . சிறுதுள்ளி பெருவெள்ளமாக தொடர்ந்தும் உதவுங்கள். இது நாம் எமது மக்களுக்காகவும் எதிர்காலச் சந்ததியினருக்காகவும் செய்யும் தொண்டே அன்றி எமது இறைவன் மகேசனுக்காக செய்யும் தொண்டல்ல . எமது காலத்திலேயே இவ்வேலைகள் யாவற்றையும் பூர்த்திசெய்ய எங்களுக்கு பக்கபலமாக இருந்து உதவுங்கள் என்று உங்களை வேண்டி எம் முருகப்பெருமான் ஆசி உங்கள் அனைவருக்கும் கிடைக்க உளமார வேண்டுகிறேன் .

மேலும் இக் கோயிலின் வளர்ச்சிக்கும் நமது சைவ சமயப்பணி தொடரவும் தொடர்ந்து உதவி செய்துவரும் தொன்டர்கள் அனைவருக்கும் எமது நிர்வாக சபையின் சார்பில் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் தினசரி காலை மாலை பூசைகளையும் முக்கியமான வருடாந்த திருவிழாக்களையும் சிறப்பாக செய்து எமது கோயிலின் வளர்ச்சிக்காக பாடுபட்டுவரும் எமது ஆலய பிரதம குருக்கள் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ ராஜராஜேஸ்வரக்குருக்கள் மற்றும் பிரம்மஸ்ரீ

மயூரநாதக்குருக்கள் ஆகியோருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இங்கு குறிப்பிடப்படாத பலர் பல்வேறு வழிகளில் எமது ஆலயத்திற்கு ஒத்துழைப் வழங்கிய வண்ணம் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது ஆலய நிர்வாக சபையின் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கந்தனை எந்த உறவு கொண்டு வழிபட்டாலும் அவனிடம் யாம் வேண்டுவது

"பொன்னும் பொருளும் போகமும் அல்ல நின்பால்

அருளும் அறனும் அன்பும் மூன்றுமே"

என அவனது திருமலரடிசேரப் பிராத்தித்து உங்கள் அனைவருக்கும் எமது திருமுருகன் நல்லாசிகள் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

"விழிக்குத்துணை நின்திரு மென்மலர்பாதங்கள் மெய்மை குன்றா

மொழிக்குத்துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு செய்த

பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும் பயந்தனி

வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே"

நன்றி

வணக்கம்

க. குமாரசாமி

கந்தையா குமாரசாமி

தலைவர்

நியூசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபை

இல. 145, சர்ச் வீதி

ஆக்லாந்து, நியூசிலாந்து.

27.9.2015